9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

13. வணிக வரி மற்றும் பதிவுத் துறையினால் 19-4-2010 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட SRO A-13(a)/2010 ஆம் எண் அறிவிக்கையில் பிழைத் திருத்தம் செய்தது குறித்து 14-1-2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு(H1)-த் துறையின் அரசாணை எண் 4-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

14. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து 14-1-2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (பி1) துறையின் அரசாணை எண் 5-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

15. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் (கூடுதல் நடுவர் ஆயம்) கூடுதல் உறுப்பினர் (நீதிமுறை) நியமித்தது குறித்து 7-2-2011 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (இ2)-த் துறையின் அரசாணை (2டி) எண் 25-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

16. ஊரக வளர்ச்சித் துறையினால் 13-4-1995 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2)/ஊவ/1439(b-17)/95 மற்றும் II(2)/ஊவ/1439(b-15)/95 ஆம் எண் அறிவிக்கைகளில் திருத்தங்கள் செய்தும் மற்றும் அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களாக அமைந்துள்ள உள்ளூர் பகுதிகளைக் கொண்டு திருப்பூர் மாவட்டத்திற்கான மாவட்ட ஊராட்சி ஏற்படுத்தியது குறித்தும் 25-2-2011 ஆம் நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ஊ2)-த் துறையின் அரசாணை எண் 26-இல் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]